ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2157/3 - 2020 ජනවාරි මස 06 වැනි සඳුදා - 2020.01.06

*2157/3 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு சனவரி மாதம் 06 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

*ச. வ. பி. 21/1978* (X) (A).

**1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்**

25அ என்னும் பிரிவின் கீழான கட்டளை

1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 25அ என்னும் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக் கொண்டு, உயர் கல்வி, தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்க அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்த்தன ஆகிய நான், மேற்கூறப்பட்ட சட்டத்தின் 70இ என்னும் பிரிவின் கீழான அறிக்கையொன்றைப் பெற்றுக்கொண்டு, 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பனிகள் சட்டத்தின் கீழ் இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட கம்பனியொன்றாகவுள்ளதும் PV 101137 என்னும் பதிவிலக்கத்தைக் கொண்டதுமான எஸ். எல். ரி. கெம்பஸ் (பிறைவேட்) லிமிட்டெட் தொடர்பில், சொல்லப்பட்ட சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்டதும் 2019 ஆம் ஆண்டு மே மாதம் 2 ஆந் திகதிய 2121/44 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான கட்டளைக்கான II ஆம் அட்டவணையை, அதற்கான நிரல் I இலும் மற்றும் நிரல் II இலுள்ள அதன் நேரொத்த பதிவிலும் காணப்படுகின்ற "மனிதவள முகாமைத்துவத்தில் சிறப்பு வணிக முகாமைத்துவ இளமாணி" என்னும் பதிவை உடனடுத்துப் பின்னர், இதற்கான அட்டவணை I இல் குறித்துரைக்கப்பட்ட நிபந்தனைகளுக்கமைய, இதற்கான அட்டவணை II இன் முறையே நிரல் I இன் கீழும் மற்றும் நிரல் II இன் கீழும் குறித்துரைக்கப்பட்ட பதிவுகளைச் சேர்ப்பதன் மூலம் இக்கட்டளையினால் திருத்துகின்றேன்.

1A - PG 4840 — 517 (2020/01)

இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

## அட்டவணை I

*நிபந்தனைகள்*

1. எஸ். எல். ரி. கெம்பஸ் (பிறைவேட்) லிமிட்டெட், இதற்கான அட்டவணை II இல் குறித்துரைக்கப்பட்ட பட்டங்கள் தொடர்பில் பட்ட நிகழ்ச்சித் திட்டங்களுக்காக மாணவர்களைச் சேர்க்கும்போது,

(i) போக்குவரத்து மற்றும் சுற்றுலா முகாமைத்துவத்தில் விஞ்ஞான இளமாணி, போக்குவரத்து மற்றும் சுற்றுலா முகாமைத்துவத்தில் சிறப்பு விஞ்ஞான இளமாணி, ஈ-சுற்றுலா மற்றும் டிஜிட்டல் சந்தைப்படுத்தலில் சிறப்பு விஞ்ஞான இளமாணி தொடர்பில் -

(அ) க. பொ. த. (உயர் தரப்) பரீட்சையில் வணிகக் கற்கை உட்பட ஏதேனும் பாடத்துறையில் ஒரே தடவையில் மூன்று (3) சாதாரண சித்திகள் ('S') என்ற அல்லது அதற்குச் சமமான ; அல்லது

(ஆ) குறித்துரைக்கப்பட்ட அதிகாரியினால் அங்கீகரிக்கப்பட்ட இணைக்கும் கற்கைநெறியொன்றுடன் சேர்த்து க. பொ. த. (உயர் தரப்) பரீட்சையில் ஏதேனும் பாடத்துறையில் ஒரே தடவையில் மூன்று (3) சாதாரண சித்திகள் ('S') என்ற அல்லது அதற்குச் சமமான,

குறைந்தபட்ச நுழைவுத் தகைமைக்கு அமைந்தொழுகுதல் வேண்டும்.

(ii) எந்திர மின்னணுவியல் பொறியியலில் சிறப்பு விஞ்ஞான பொறியியல் இளமாணி தொடர்பில், க. பொ. த. (உயர் தரப்) பரீட்சையில் ஒரே தடவையில் பௌதிக விஞ்ஞானப் பாடத்துறையில் மூன்று (3) சாதாரண சித்திகளென்ற ('S') அல்லது அதற்குச் சமமான குறைந்தபட்ச நுழைவுத் தகைமைக்கு அமைந்தொழுகுதல் வேண்டும்.

(iii) விவசாய தொழில்நுட்பவியலில் சிறப்பு தொழில்நுட்பவியல் இளமாணி தொடர்பில், க. பொ. த. (உயர் தரப்) பரீட்சையில் ஒரே தடவையில் பௌதிக விஞ்ஞானம், உயிரியல் விஞ்ஞானம் அல்லது தொழில்நுட்பவியல் பாடத்துறையில் மூன்று (3) சாதாரண சித்திகளென்ற ('S') அல்லது அதற்குச் சமமான குறைந்தபட்ச நுழைவுத் தகைமைக்கு அமைந்தொழுகுதல் வேண்டும்.

2. எஸ். எல். ரி. கெம்பஸ் (பிறைவேட்) லிமிட்டெட், குறித்துரைக்கப்பட்ட அதிகாரியினால் நடாத்தப்படும் ஐந்து (5) ஆண்டு மீள் மீளாய்வுக்கு அமைய இதற்கான அட்டவணை II இல் குறித்துரைக்கப்பட்ட பட்டங்களை முனைவதற்கு ஏற்றங்கீகரிக்கப்படுகின்றது.

## அட்டவணை II

| *நிரல் I*<br>*பட்டங்கள்* | *நிரல் II*<br>*பட்டங்களுக்கான சுருக்கீடுகள்* |
|---|---|
| போக்குவரத்து மற்றும் சுற்றுலா முகாமைத்துவத்தில் விஞ்ஞான இளமாணி | பிஎஸ்சீ (போக்குவரத்து மற்றும் சுற்றுலா முகாமைத்துவம்) |
| போக்குவரத்து மற்றும் சுற்றுலா முகாமைத்துவத்தில் சிறப்பு விஞ்ஞான இளமாணி | பிஎஸ்சீ (சிறப்பு போக்குவரத்து மற்றும் சுற்றுலா முகாமைத்துவம்) |
| ஈ-சுற்றுலா மற்றும் டிஜிட்டல் சந்தைப்படுத்தலில் சிறப்பு விஞ்ஞான இளமாணி | பிஎஸ்சீ சிறப்பு (ஈ-சுற்றுலா மற்றும் டிஜிட்டல் சந்தைப் படுத்தல்) |
| எந்திர மின்னணுவியல் பொறியியலில் சிறப்பு விஞ்ஞான பொறியியல் இளமாணி | பிஎஸ்சீ சிறப்பு (பொறியியல்) (எந்திர மின்னணுவியல் பொறியியல்) |
| விவசாய தொழில்நுட்வியலில் சிறப்பு தொழில் நுட்பவியல் இளமாணி | பிரெக் சிறப்பு (விவசாய தொழில்நுட்பவியல்) |

கலாநிதி பந்துல குணவர்த்தன,
உயர் கல்வி, தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்க அமைச்சர்.

கொழும்பு,
*2020, சனவரி 03.*

*01-529/1*

*ச. வ. பி. 21/1978* (X) (அ).

## *1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்*

*25அ என்னும் பிரிவின் கீழான கட்டளை*

*1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 25அ என்னும் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக் கொண்டு, உயர் கல்வி, தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்க அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்த்தன ஆகிய நான், 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பனிகள் சட்டத்தின் கீழ் இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட கம்பனியொன்றாகவுள்ளதும்* PV *94125 என்னும் பதிவிலக்கத்தைக் கொண்டதுமான நாகானந்த இன்டநஷனல் இன்ஸ்டிடியூட் வோர் புடிஸ்ட் ஸ்டடிஸ் (பிறைவேட்) லிமிட்டெட் தொடர்பில், மேற்சொல்லப்பட்ட சட்டத்தின் 70 இ என்னும் பிரிவின் கீழ் அறிக்கையொன்றைப் பெற்றுக்கொண்டு அதற்கான* I *ஆம் நிரலிலும் மற்றும்* II *ஆம் நிரலிலுள்ள அதன் நேரொத்த பதிவிலும் காணப்படும் "பௌத்த கற்கைகளில் தத்துவவியல் முதுமாணி" என்னும் பதிவை உடனடுத்து முறையே இதற்கான* II *ஆம் அட்டவணையின் நிரல்* I *மற்றும் நிரல்* II *இன் கீழ் குறித்துரைக்கப்பட்ட பதிவுகளை இதற்கான* I *ஆம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைய சேர்ப்பதன் மூலம் சொல்லப்பட்ட சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்டதும் 2015 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 7 ஆந் திகதிய 1944/2 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான கட்டளைக்கான* II *ஆம் அட்டவணையை இக்கட்டளையால் திருத்துகின்றேன்.*

### *அட்டவணை* I

*நிபந்தனைகள்*

1. நாகானந்த இன்டநஷனல் இன்ஸ்டிடியூட் வோர் புடிஸ்ட் ஸ்டடிஸ் (பிறைவேட்) லிமிட்டெட் ஆனது குறித்துரைக்கப்பட்ட அதிகாரியால் நடாத்தப்பட்ட ஐந்து (5) ஆண்டுகள் மீள்-மீளாய்விற்கு அமைய இதற்கான II ஆம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட பட்டத்தை வழங்குவதற்கு ஏற்றங்கீகரிக்கப்படுகின்றது.

2. நாகானந்த இன்டநஷனல் இன்ஸ்டிடியூட் வோர் புடிஸ்ட் ஸ்டடிஸ் (பிறைவேட்) லிமிட்டெட் ஆனது இதற்கான II ஆம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட, பட்ட நிகழ்ச்சித் திட்டத்திற்காக மாணவர்களைச் சேர்த்துக்கொள்ளும்போது, இலங்கைத் தகைமைச் சட்ட வேலையில் (இதச) விதித்துரைக்கப்பட்டவாறு பின்வரும் குறைந்தபட்ச பதிவுத் தகைமைகளுள் ஒன்றைக் கடைப்பிடித்தல் வேண்டும் :-

(அ) இயைபான கற்கைப் பரப்புகளில் ஏதேனும் ஏற்றங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் அல்லது உயர் கல்வி நிறுவனத்தில் தத்துவவியலில் முதுமாணிப் பட்டமொன்றினை வெற்றிகரமாகப் பூர்த்திசெய்தல் ;

(ஆ) இயைபான கற்கைப் பரப்புகளில் ஏதேனும் ஏற்றங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் அல்லது உயர் கல்வி நிறுவனத்தில் முதுமாணிப் பட்டம் ஒன்றினை வெற்றிகரமாகப் பூர்த்திசெய்தல் ;

(இ) 0-4 வரையான அளவுத்திட்டம் ஒன்றில் 3.0 உடைய குறைந்தபட்ச ஜீபீஏ (GPA) ஒன்றுடன் இயைபான கற்கைப் பரப்புகளில் ஏதேனும் ஏற்றங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் அல்லது உயர் கல்வி நிறுவனத்தில் இளமாணி சிறப்புப் பட்டம் ஒன்றில் (இதச) மட்டம் 6 இனை வெற்றிகரமாகப் பூர்த்திசெய்தல் ;

(ஈ) அத்தகைய ஆளின் ஆராய்ச்சித் திறன்கள் விதிவிலக்கான தகுதியைக் கொண்டுள்ளவிடத்து குறைந்தபட்சம் ஓர் ஆண்டுக் காலப்பகுதியின் பின்னர் தத்துவவியலில் கலாநிதி (பிஎச்டி) மட்டத்திற்குத் தரமுயர்த்தப்படக்கூடியதான நாகானந்த இன்டநஷனல் இன்ஸ்டிடியூட் வோர் புடிஸ்ட் ஸ்டடிஸ் (பிறைவேட்) லிமிட்டெட்டின் தத்துவவியல் முதுமாணி கற்கையை (எம்பில்) தொடருவதற்கு வலிதான பதிவுடன் இயைபான கற்கை இடப்பரப்பில் ஏதேனும் ஏற்றங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் அல்லது உயர் கல்வி நிறுவனத்தில் இளமாணி சிறப்புப் பட்டத்தில் இதச மட்டம் 6 இனை வெற்றிகரமாகப் பூர்த்திசெய்தல் ;

(உ) 0-4 வரையான அளவுத்திட்டமொன்றில் 3.0 உடைய குறைந்தபட்ச ஜீபீஏ (GPA) ஒன்றுடன் இயைபான கற்கை இடப்பரப்பில் ஏதேனும் ஏற்றங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் அல்லது உயர் கல்வி நிறுவனத்தில் இளமாணிப் பட்டத்தில் இதச மட்டம் 5 இனை வெற்றிகரமாகப் பூர்த்திசெய்தல் ; அத்துடன் அத்தகைய ஆளின் ஆராய்ச்சித் திறன்கள் விதிவிலக்கான தகுதியைக் கொண்டுள்ளவிடத்து குறைந்தபட்சம் ஓர் ஆண்டுக் காலப்பகுதியின் பின்னர் தத்துவவியலில் கலாநிதி (பிஎச்டி) மட்டத்திற்குத் தரமுயர்த்தப்படக்கூடியதான நாகானந்த இன்டநஷனல் இன்ஸ்டிடியூட் வோர் புடிஸ்ட் ஸ்டடிஸ் (பிறைவேட்) லிமிட்டெட்டில் தத்துவவியல் முதுமாணி கற்கையை (எம்பில்) தொடருவதற்கு வலிதான பதிவுடன் இதச மட்டம் 6 இற்கு சமமான 30 திறமைச் சித்திகளைப் பூர்த்திசெய்த பின்னர் நடாத்தப்பட்ட தகைமை வாய்ந்த பரீட்சை ஒன்றினை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்தல்.

**அட்டவணை** II *(தொடர்ச்சி)*

| *நிரல் I*<br><br>*பட்டங்கள்* | *நிரல் II*<br><br>*பட்டங்களுக்கான சுருக்கீடுகள்* |
|---|---|
| பௌத்த கற்கைகளில் தத்துவவியல் கலாநிதி | பீஎச்டி (பௌத்த கற்கைகள்) |

கலாநிதி பந்துல குணவர்த்தன,
உயர் கல்வி, தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்க அமைச்சர்.

கொழும்பு,
*2020, சனவரி 03.*

*01-529/2*

---

*ச. வ. பி. 21/1978* (X) (A).

**1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்**

25அ என்னும் பிரிவின் கீழான கட்டளை

*1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 25அ என்னும் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக் கொண்டு, உயர் கல்வி, தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்க அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்த்தன ஆகிய நான், மேற்கூறப்பட்ட சட்டத்தின் 70இ என்னும் பிரிவின் கீழான அறிக்கையொன்றைப் பெற்றுக்கொண்டு 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பனிகள் சட்டத்தின் கீழ் இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட கம்பனியொன்றாகவுள்ளதும்* PV *17745 என்னும் பதிவிலக்கத்தைக் கொண்டதுமான சினெக் கெம்பஸ் (பிறைவேட்) லிமிட்டெட் தொடர்பில், சொல்லப்பட்ட சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்டதும் 2019 ஆம் ஆண்டு மே மாதம் 2 ஆந் திகதிய 2121/45 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான கட்டளைக்கான* II *ஆம் அட்டவணையை, அதற்கான நிரல்* I *இலும் மற்றும் நிரல்* II *இலுள்ள அதன் நேரொத்த பதிவிலும் காணப்படுகின்ற "ஆங்கிலத்தில் சிறப்பு கலை இளமாணி" என்னும் பதிவை உடனடுத்துப் பின்னர், இதற்கான அட்டவணை* I *இல் குறித்துரைக்கப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைய, இதற்கான அட்டவணை* II *இல் முறையே நிரல்* I *இன் கீழும் மற்றும் நிரல்* II *இன் கீழும் குறித்துரைக்கப்பட்ட பதிவுகளைச் சேர்ப்பதன் மூலம் இக்கட்டளையினால் திருத்துகின்றேன்.*

**அட்டவணை** I

*நிபந்தனைகள்*

1. சினெக் கெம்பஸ் (பிறைவேட்) லிமிட்டெட், இதற்கான அட்டவணை II இல் குறித்துரைக்கப்பட்ட பட்டங்கள் தொடர்பில் பட்ட நிகழ்ச்சித் திட்டங்களுக்காக மாணவர்களைச் சேர்க்கும்போது,

(i) மென்பொருள் பொறியியலில் சிறப்பு விஞ்ஞான இளமாணி தொடர்பில் -

(அ) க. பொ. த. (உயர் தரப்) பரீட்சையில் பௌதிக விஞ்ஞானப் பாடத்துறையில் ஒரே தடவையில் மூன்று (3) சாதாரண சித்திகள் ('S') என்ற அல்லது அதற்குச் சமமான அல்லது,

(ஆ) குறித்துரைக்கப்பட்ட அதிகாரியினால் அங்கீகரிக்கப்பட்ட இணைக்கும் கற்கைநெறியுடன் சேர்த்து க. பொ. த. (உயர் தரப்) பரீட்சையில் ஏதேனும் பாடத்துறையில் ஒரே தடவையில் மூன்று (3) சாதாரண சித்திகள் ('S') என்ற,

குறைந்தபட்ச நுழைவுத் தகைமைக்கு அமைந்தொழுகுதல் வேண்டும்.

(ii) வணிக மற்றும் தொழில்துறை கணிதத்தில் சிறப்பு விஞ்ஞான இளமாணி தொடர்பில், க. பொ. த. (உயர் தரப்) பரீட்சையில் பௌதிக விஞ்ஞானப் பாடத்துறையில் ஒரே தடவையில் மூன்று (3) சாதாரண சித்திகள் ('S') என்ற அல்லது அதற்குச் சமமான குறைந்தபட்ச நுழைவுத் தகைமைக்கு அமைந்தொழுகுதல் வேண்டும்.

**அட்டவணை** I *(தொடர்ச்சி)*

(iii) வங்கித் தொழில் மற்றும் நிதியியலில் சிறப்பு வணிக முகாமைத்துவ இளமாணி தொடர்பில் -

(அ) க. பொ. த. (உயர் தரப்) பரீட்சையில் வர்த்தகப் பாடத்துறையில் ஒரே தடவையில் மூன்று (3) சாதாரண சித்திகள் ('S') என்ற அல்லது அதற்குச் சமமான ; அல்லது

(ஆ) குறித்துரைக்கப்பட்ட அதிகாரியினால் அங்கீகரிக்கப்பட்ட இணைக்கும் கற்கைநெறியொன்றுடன் சேர்த்து க. பொ. த. (உயர் தரப்) பரீட்சையில் ஏதேனும் பாடத்துறையில் ஒரே தடவையில் மூன்று (3) சாதாரண சித்திகள் ('S') என்ற,

குறைந்தபட்ச நுழைவுத் தகைமைக்கு அமைந்தொழுகுதல் வேண்டும்.

2. சினெக் கெம்பஸ் (பிறைவேட்) லிமிட்டெட், குறித்துரைக்கப்பட்ட அதிகாரியினால் நடாத்தப்படும் ஐந்து (5) ஆண்டு மீள் மீளாய்வுக்கு அமைய இதற்கான அட்டவணை II இல் குறித்துரைக்கப்பட்ட பட்டங்களை முனைவதற்கு ஏற்றங்கீகரிக்கப்படுகின்றது.

**அட்டவணை** II

| *நிரல் I*<br>*பட்டங்கள்* | *நிரல் II*<br>*பட்டங்களுக்கான சுருக்கீடுகள்* |
|---|---|
| மென்பொருள் பொறியியலில் சிறப்பு விஞ்ஞான இளமாணி | பிஎஸ்சீ சிறப்பு (மென்பொருள் பொறியியல்) |
| வணிக மற்றும் தொழில்துறை கணிதத்தில் சிறப்பு விஞ்ஞான இளமாணி | பிஎஸ்சீ சிறப்பு (வணிக மற்றும் தொழில்துறை கணிதம்) |
| வங்கித் தொழில் மற்றும் நிதியியலில் சிறப்பு வணிக முகாமைத்துவ இளமாணி | பிபிஎம் சிறப்பு (வங்கித் தொழில் மற்றும் நிதியியல்) |

கலாநிதி பந்துல குணவர்த்தன,
உயர் கல்வி, தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்க அமைச்சர்.

கொழும்பு,
*2020, சனவரி 03.*

*01-529/3*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.